# அரச குற்ற வழக்குத் தொடுநர்களுக்கான சட்டத் தொகுப்பு

## முன்னுரை

1.1 அரச குற்ற வழக்குத் தொடுநர்களுக்கான சட்டத் தொகுப்பு (சட்டத் தொகுப்பு) குற்றப் பொதுவழக்குத் தொடுப்புப் பணிப்பாளரால் (Director of Public Prosecutions (DPP) (டிபிபி)), 1985 குற்ற வழக்கீட்டுச் சட்டத்தின் 10வது பிரிவின் கீழ் வழங்கப்படுவதாகும். இது சட்டத் தொகுப்பின் ஏழாவது பதிப்பாக இருப்பதுடன் முந்திய அனைத்துப் பதிப்புக்களுக்கும் பதிலீடாக அமைகிறது.

1.2 டிபிபி என்பவர் அரச குற்ற வழக்குத் தொடுப்புச் சேவையின் (Crown Prosecution Service (CPS) (சிபிஎஸ்) தலைவராவார். இங்கிலாந்துக்கும் வேல்ஸுக்குமான முக்கிய குற்றப் பொதுவழக்குச் சேவையாக இச்சேவை உள்ளது. டிபிபி, சிபிஎஸ் சேவையின் பணிகள் விடயத்தில் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் பிரதம சட்ட அதிகாரியின் (Atttorney General) மேற்பார்வையின் கீழ் சுயாதீனமாக இயங்குபவர்.

1.3 சட்டத் தொகுப்பு, குற்ற வழக்குத் தொடுப்புகள் சம்பந்தமாகத் தீர்மானிக்கும்போது பின்பற்றவேண்டிய பொது நெறிமுறைகள் குறித்து குற்ற வழக்குத் தொடுநர்களுக்கு வழிகாட்டுகிறது. சட்டத் தொகுப்பு, முக்கியமாக சிபிஎஸ் சேவையைச் சேரந்த குற்ற வழக்குத் தொடுநர்களுக்காகவே வழங்கப்படுகிறது. இருப்பினும், ஏனைய குற்ற வழக்குத் தொடுநர்களும் வழக்காறு காரணமாக, அல்லது சட்டம் அவ்வாறு விதிக்கின்றமையால், சட்டத் தொகுப்பைப் பின்பற்றி வருகின்றனர்.

1.4 இச்சட்டத் தொகுப்பில் "சந்தேக நபர்" எனப்படும் பதம் இதுவரை முறையான குற்ற விசாரணை நடைமுறைக்கு ஆளாகாத ஆளொருவரை வர்ணிக்கப் பயன்படுத்தப்படுகிறது. "பிரதிவாதி" எனப்படும் பதம், குற்றம் சாட்டப்பட்டுள்ள அல்லது அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ள ஆளொருவரை வர்ணிக்கப் பயன்படுத்தப்படுகிறது. மற்றும் "குற்றவாளி" எனப்படும் பதம் தனது குற்றத்தை ஒரு காவல் துறை அலுவலருக்கு அல்லது வேறு விசாரணையாளருக்கு அல்லது குற்ற வழக்குத் தொடுநருக்கு ஒப்புக்கொண்ட, அல்லது ஒரு நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஆளொருவரை வர்ணிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

## பொது நெறிமுறைகள்

2.1 குற்ற வழக்குத் தொடர்வதற்கு அல்லது நீதி மன்றத்துக்கு வெளியே தீர்வு காண விதந்துரைப்பதற்கு எடுக்கப்படும் தீர்மானம், சந்தேக நபர்கள், பலியாட்கள் சாட்சிகள் என்போரையும், அத்துடன் பொதுமக்களையும் பாதிக்கும் ஒரு காத்திரமான நடவடிக்கையாகும். இத்தகைய தீர்மானம் வெகு அவதானமாக எடுக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

2.2 சரியான குற்றத்துக்குச் சரியான ஆள் மீது குற்ற வழக்குத் தொடுக்கப்படுவதை நிச்சயப்படுத்திக்கொள்வதும், எங்கெங்கு இயலுமோ அங்கெல்லாம் குற்றவாளிகளை நீதியின்பால் கொண்டுவருவதும் குற்ற வழக்குத் தொடுநர்களின் கடமையாகும். வழக்கு சம்பந்தப்பட்ட தீர்மானங்களை நியாயமாகவும், பாகுபாடு இன்றியும், நேர்மையுடனும் எடுப்பது, பலியாட்களுக்கும் சாட்சிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் பொதுமக்களுக்கும் நீதியைப் பெற்றுக் கொடுக்க உதவும். குற்ற வழக்குத் தொடுநர்கள் சட்டம் சரிவர பிரயோகிக்கப்படுவதையும், தொடர்புடைய சாட்சியங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதையும் வெளிப்படுத்துதல் பற்றிய கடப்பாடுகள் கடைப்பிடிக்கப்படுவதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

2.3 ஒவ்வொரு வழக்கும் அதன் சொந்தப் பொருண்மைகளினதும் சொந்தத் தகுதிகளினதும் அடிப்படையில் ஆராயப்படவேண்டும். எனினும் வழக்கு ஒவ்வொன்றிலும் பின்பற்றப்படவேண்டிய பொது நெறிமுறைகள் உள்ளன.

2.4 குற்ற வழக்குத் தொடுநர்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும் புறநிலை சார்ந்தும் இருத்தல் வேண்டும். சந்தேக நபர், பலியாள் அல்லது சாட்சி எவரினதும் இனம் அல்லது தேசிய வம்சாவழி, பாலினம், வலதுக்குறைவு, வயது, சமயம் அல்லது நம்பிக்கை, அரசியல் கருத்துக்கள், பாலியல் சார்பு அல்லது பாலின அடையாளம் என்பன பற்றிய தங்கள் தனிப்பட்ட கருத்துக்கள் தங்கள் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்த அவர்கள் அனுமதிக்கலாகாது. முறைகேடான அல்லது தகாமுறை அழுத்தங்கள், எவ்விடமிருந்து வரினும், அவற்றால் குற்ற வழக்குத் தொடுநர்கள் பாதிப்புக்கு ஆளாகலாகாது. குற்ற வழக்குத் தொடுநர்கள் தனியே குற்றத்தீர்ப்பு ஒன்றை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், எப்போதும் நீதியின் நலன் கருதிச் செயற்படவேண்டும்.

2.5 நடைமுறையில் உள்ள, தொடர்புடைய சமத்துவச் சட்டத்தின் நோக்கங்கள் சம்பந்தப்பட்டவரை, அதிகாரமுள்ள ஓர் அரச அமைப்பாக சிபிஎஸ் சேவை உள்ளது. சட்டத்தில் கூறப்பட்டுள்ள கடமைகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக குற்ற வழக்குத் தொடுநர்கள் உள்ளனர்.

2.6 வழக்கு ஒன்றின் ஒவ்வொரு கட்டத்திலும், குற்ற வழக்குத் தொடுநர்கள், மனித உரிமைகள் மீதான ஐரோப்பிய உடன்படிக்கையின் நெறிமுறைகளை, 1998 மனித உரிமைகள் சட்டத்துக்கு அமைவாகப் பிரயோகித்தல் வேண்டும். குற்ற வழக்குத் தொடுநர்கள், பிரதம சட்ட அதிகாரி வழங்கக்கூடிய வழிகாட்டுதல்கள், நடைமுறையில் உள்ள குற்றவியல் நடைமுறை விதிகள் ஆகியவற்றையும் பின்பற்றுதல் வேண்டும் அத்துடன் சர்வதேச உடன்படிக்கைகளின் விளைவாக எழும் கடப்பாடுகளையும் ஒழுகி நடத்தல் வேண்டும். அவர்கள், டிபிபியின் சார்பில் சிபிஎஸ் சேவையால், அதன் இணையத்தளத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ள சிபிஎஸ் சேவையின் கொள்கைகளுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் அமைவாக நடத்தல் வேண்டும்.

## குற்ற வழக்குத் தொடுப்பதா என்பது பற்றிய தீர்மானம்

3.1 பாரதூரமிக்க அல்லது சிக்கல்மிகுந்த வழக்குகளில், ஆளொருவர் மீது குற்றவியல் குற்றச்சாட்டு கொண்டு வருவதா என்றும், அவ்வாறாயின், அக்குற்றச்சாட்டு எதுவாக இருத்தல் வேண்டும் என்றும் குற்ற வழக்குத் தொடுநர்கள் தீர்மானிப்பர். அவர்கள் தங்கள் தீர்மானங்களை இச்சட்டத் தொகுப்பையும் குற்றஞ்சாட்டுதல் பற்றிய டிபிபியின் வழிகாட்டியையும் அனுசரித்து எடுப்பர். காவல் துறையினர் தங்கள் பொறுப்பின் கீழ் வரும் வழக்குகளில், ஆளொருவர் மீது குற்றவியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதா என்று தீர்மானிக்கும் விடயத்திலும் இதே நெறிமுறைகளைக் கையாளுவர்.

3.2 காவல் துறையினரும் ஏனைய புலன்விசாரணையாளர்களும் புரியப்பட்டதாகக் கூறப்படும் எக்குற்றச் செயல் பற்றியும் புலன்விசாரணைகளை நடத்தவும், தங்கள் வளங்களை எவ்வாறு இதன் பொருட்டுப் பயன்படுத்துவது என்று தீர்மானிக்கவும் பொறுப்புடையவர்களாக உள்ளனர். புலன்விசாரணை ஒன்றை ஆரம்பித்தல் அல்லது தொடருதல் மற்றும் புலன்விசாரணையின் பரப்பெல்லை பற்றிய தீர்மானங்களும் இவற்றில் அடங்கும். குற்ற வழக்குத் தொடருநர்கள் காவல் துறையினருக்கும் ஏனைய புலன்விசாரணையாளர்களுக்கும், விசாரணையை நடத்தக்கூடிய கோணங்கள், சாட்சியங்களுக்கான தேவைகள் என்பன பற்றி அடிக்கடி ஆலோசனை வழங்குவர். அத்துடன் குற்றச்சாட்டுச் சுமத்துவதற்கு முன்னதான நடைமுறைகளிலும் உதவுவர். பெரிய அளவிலான புலன்விசாரணைகளின்போது, புலன்விசாரணைக்கான மொத்த மூலோபாயம் பற்றி ஆலோசனை வழங்குமாறு குற்ற வழக்குத் தொடுநர் கோரப்படலாம். இதில் குற்றச் செயலின் பரப்பெல்லையைத் துய்த்துணருதல் அல்லது குறுக்குதல், புலன்விசாரணையில் உள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை என்பன பற்றிய தீர்மானங்கள் அடங்கும். ஒரு நியாயமான கால எல்லைக்குள் புலன்விசாரணையை நிறைவு செய்யக் காவல் துறையினருக்கும் ஏனைய

3.3 குற்ற வழக்குத் தொடுநர்கள், சாட்சியங்களில் உள்ள பலவீனங்களை இனங்கண்டு, இயலுமானவிடத்து, அவற்றை நிவர்த்தி செய்ய முற்படவேண்டும். ஆயினும், நுழைவாயில் சோதனைக்குட்பட்டு, (Threshold Test) (பிரிவு 5 ஐப் பார்க்க) முழுச் சட்டத் தொகுப்பு சோதனையின் (Full Code Test) (பிரிவு 4 ஐப் பார்க்க) சாட்சியத் தேவை பற்றிய கட்டத்தை அடையாத, மற்றும் மேலதிக புலன்விசாரணை மூலம் பலப்படுத்த முடியாத, அல்லது பொதுநலனைக் கருத்தில் கொண்டு குற்ற வழக்குத் தொடுத்தல் ஆகாது என்று தெளிவுறக் காண்பிக்கும் வழக்குகளை அவர்கள் விரைந்து கைவிட்டுவிடவேண்டும் (பிரிவு 4 ஐப் பார்க்க). குற்ற வழக்குத் தொடுநர்கள், முதன்மையாக காவல் துறையினரும் ஏனைய புலன்விசாரணையாளர்களும் வழங்கும் சாட்சியங்களைப் பரிசீலனைக்கு எடுக்கின்றனர். இருப்பினும், சந்தேக நபரும் அவர் சார்பில் செயற்படும் ஏனையோரும் சாட்சியங்களை அல்லது தகவல்களை குற்ற வழக்குத் தொடருநருக்கு காவல் துறையினர் அல்லது ஏனைய புலன்விசாரணையாளர்கள் மூலம், குற்றச்சாட்டு சுமத்தப்படுவதற்கு முன், குற்ற வழக்குத் தொடுநர் சரியாகத் தீர்மானம் எடுப்பதற்கு உதவியாக வழங்கலாம்.

3.4 வழக்கு ஒன்று, முழுச் சட்டத் தொகுப்பினதும் (பிரிவு 4 ஐப் பார்க்க) இரு கட்டங்களையும் கடந்தபின்னரே குற்ற வழக்குத் தொடுநர்கள் குற்ற வழக்குத் தொடுப்பை ஆரம்பிக்க அல்லது தொடரவேண்டும். சந்தேக நபரைக் குற்றச்சாட்டுத் தாக்கல் செய்யப்பட்டதன்மேல் காவலில் வைக்க நீதிமன்றத்திடம் அனுமதிக்கு விண்ணப்பிக்க உத்தேசிக்கப்பட்டு, முழுச் சட்டத் தொகுப்புச் சோதனைக்கு வேண்டிய சாட்சியங்கள் இன்னும் கிடைக்காத நிலையில், ஒரு விதிவிலக்காக நுழைவாயிற் சோதனை (பிரிவு 5 ஐப் பார்க்க) மேற்கொள்ளப்படலாம்.

3.5 நீதிமன்றங்களால் கொடுமையானதாக அல்லது நியாயமற்றதாக, மற்றும் நீதிமன்ற செயன்முறையைத் துஷ்பிரயோகம் செய்வதாகக் கருதப்படும் குற்ற வழக்குத் தொடுப்பு ஒன்றினை குற்ற வழக்குத் தொடுநர்கள் ஆரம்பித்தல் அல்லது தொடருதல் ஆகாது.

3.6 குற்ற வழக்குத் தொடுநர்கள், காவல் துறையினரிடமிருந்து அல்லது ஏனைய புலன்விசாரணையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் வழக்கு

3.7 டிபிபியின் உடன்பாட்டுடனேயே வரையறைக்குட்பட்ட சில குற்றச்செயல்கள் நீதிமன்றம் கொண்டுசெல்லப்படவேண்டும் என்று நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது. இவ்வழக்குகள் உடன்பாட்டு வழக்குகள் (consent cases) என்று அழைக்கப்படுகின்றன. இவ்வகை வழக்குகள் விடயத்தில் டிபிபி அல்லது அவர் சார்பில் செயலாற்றும் குற்ற வழக்குத் தொடுநர்கள் குற்ற வழக்குத் தொடுப்பு ஒன்றுக்கு உடன்படுவதா என்று தீர்மானிக்கும் விடயத்தில் சட்டத் தொகுப்பை நாடுவர். சில குற்றச்செயல்கள் பிரதம சட்ட அதிகாரியின் உடன்பாட்டுடனேயே நீதிமன்றம் கொண்டு செல்லப்படவேண்டும். குற்ற வழக்குத் தொடுநர்கள் இவ்வகை வழக்குகள் எவற்றையும் பிரதம சட்ட அதிகாரியின் பரிசீலனைக்கு விடும்போது நடைமுறையிலுள்ள வழிகாட்டியைப் பின்பற்றவேண்டும். மேலதிகமாக, சிபிஎஸ் சேவையை மேற்பார்வை செய்யும் மற்றும் நாடாளுமன்றத்துக்கு அதன் செயற்பாடுகள் குறித்துப் பொறுப்புக் கூறவேண்டிய பிரதம சட்ட அதிகாரியின் பணிகளின் ஒரு பகுதியாக, அவரது கவனத்துக்குச் சில வழக்குகள் கொண்டுவரப்படும்.

## முழுச் சட்டத் தொகுப்பு சோதனை

4.1 முழுச் சட்டத் தொகுப்பு சோதனையில் இரு கட்டங்கள் உள்ளன: (i) சாட்சியங்கள் சம்பந்தமான கட்டம் அடுத்து, (ii) பொது நலன் சம்பந்தமான கட்டம்.

4.2 பெரும்பாலான வழக்குகளைப் பொறுத்தவரை, குற்ற வழக்குத் தொடுநர்கள் புலன்விசாரணைகள் நிறைவேறி, கிடைக்கக்கூடிய அனைத்துச் சாட்சியங்களும் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னரே குற்ற வழக்கைத் தொடுப்பதா என்று தீர்மானிக்கவேண்டும். எனினும், சாத்தியமான அனைத்துச் சாட்சியங்களும் சேகரிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்படுவதற்குமுன்னரே, பொதுநலன் கருதி குற்ற வழக்குத் தொடுக்கப்படலாகாது எனத் தெளிவாகப் புலப்படுத்தும் வழக்குகள் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில், வழக்கைத் தொடர்வதில்லை என்று குற்ற வழக்குத் தொடுநர்கள் தீர்மானிக்கலாம்.

4.3 குற்றப்பழி குறித்த முழுவரம்பும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பொது நலன் குறித்து அறிவுபூர்வமான மதிப்பீடு செய்யும் நிலையை எய்தியுள்ளதாகவும் திருப்தி ஏற்படும்போது மட்டுமே குற்ற வழக்குத் தொடுநர்கள் இத்தகைய தீர்மானத்தை எடுக்கவேண்டும். அவ்வாறான தீர்மானத்தை எடுப்பதற்குப் போதுமான தகவல்கள் குற்ற வழக்குத் தொடுநர்கள் வசம் இல்லாதபோது, புலன்விசாரணை தொடர்ந்து நடத்தப்பட்டு, தீர்மானம் ஒன்று, இப்பிரிவில் கூறப்பட்டிருக்கும் முழுச் சட்டத் தொகுப்பு சோதனையின்படி பின்னர் எடுக்கப்படவேண்டும்.

### சாட்சியக் கட்டம்

4.4 குற்றச்சாட்டு ஒவ்வொன்றிலும், சந்தேக நபர் ஒவ்வொருவருக்கும் எதிராகக் குற்றத்தீர்ப்பு வழங்கப்படும் உண்மையான வாய்ப்புநிலை ஏற்படும் வகையில் போதுமான சாட்சியங்கள் உள்ளதாகக் குற்ற வழக்குத் தொடுநர் திருப்தி கொள்ளவேண்டும். பிரதிவாதி தரப்பினரின் வாதம் எவ்வகையாக இருக்கலாம், அது எவ்வாறு குற்றத்தீர்ப்பு வாய்ப்பைப் பாதிக்கலாம் என்பன குறித்து அவர்கள் ஆராயவேண்டும். சாட்சியக் கட்டத்தைத் தாண்டாத ஒரு வழக்கு, அது எவ்வளவு பாரதூரமானதாக அல்லது உணர்வுகளைத் தூண்டுவதாக இருந்தாலும் தொடர்ந்து நடத்தப்படலாகாது

4.5 குற்றத்தீர்ப்பு வழங்கப்படும் உண்மையான வாய்ப்புநிலையைக் கண்டறிதல், பிரதிவாதி தரப்பு வாதம், சந்தேக நபர் வழங்கும் அல்லது அவர் நம்பிக்கை

4.6 குற்ற வழக்கீட்டுக்கு போதிய சாட்சியம் உள்ளதா என்று தீர்மானிக்கும்போது, குற்ற வழக்குத் தொடுநர்கள் தமக்குத்தாமே கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டுக்கொள்ளவேண்டும்:

சாட்சியத்தை நீதிமன்றத்தில் பயன்படுத்த இயலுமா?
சில சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளல் குறித்து கேள்வி ஏதும் எழக்கூடுமா என்று குற்ற வழக்குத் தொடுநர்கள் ஆராயவேண்டும். அவ்வாறு செய்யும்போது, குற்ற வழக்குத் தொடுநர்கள் கீழ்க்கண்டவற்றை மதிப்பீடு செய்துகொள்ளவேண்டும்:

a) அச்சாட்சியம் ஏற்புடையதல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் சாத்தியம் அத்துடன்
b) மொத்தமாகச் சாட்சியங்களை நோக்கும்போது அச்சாட்சியத்தின் முக்கியத்துவம்.

சாட்சியம் நம்பகமானதா?
குற்ற வழக்குத் தொடுநர்கள், சாட்சியத்தின் துல்லியம் மற்றும் நேர்மை என்பன உட்பட, அதன் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கக்கூடிய காரணங்கள் எவையும் உள்ளனவா என்று ஆராயவேண்டும்.

சாட்சியம் வாய்மையானதா?
குற்ற வழக்குத் தொடுநர்கள், சாட்சியத்தின் வாய்மையைக் கேள்விக்குள்ளாக்கக்கூடிய காரணங்கள் உள்ளனவா என்று ஆராயவேண்டும்.

**பொதுநலனைக் கருத்தில் கொள்ளும் கட்டம்**

4.7 குற்ற வழக்கீட்டுக்கு இட்டுச்செல்வதை நியாயப்படுத்தும் போதிய சாட்சியங்கள் உள்ள ஒவ்வொரு வழக்கிலும் பொதுநலன் கருதிக் குற்ற வழக்கீடு செய்யப்படவேண்டுமா என்று குற்ற வழக்குத் தொடுநர்கள் ஆராயவேண்டும்.

4.8 சாட்சியக் கட்டத்தின் தேவைகள் நிறைவேறியதும் குற்ற வழக்கீடு இயல்பாகவே தொடரும் எனும் விதியொன்று என்றும் இருந்ததில்லை. பொது நலன் கருதும் காரணிகள் குற்ற வழக்கீட்டுக்கு எதிராக இருப்பதாகவும் அக்காரணிகள் குற்ற வழக்கீட்டுக்குச் சார்பான காரணிகளை விஞ்சி இருப்பதாகவும் குற்ற வழக்குத் தொடுநர்களுக்குத் திருப்தி ஏற்பட்டாலொழிய, வழமையாக குற்ற வழக்கீடு தொடரும். சில வழக்குகளில், குற்றச் செயல் புரிந்தவர் மீது குற்ற வழக்கீட்டைத் தவிர்த்து, நீதிமன்ற விசாரணைக்கு வெளியே அவரது விடயம் கையாளப்படும் வாய்ப்பு ஒன்றை அவருக்கு வழங்குவதன் மூலம் பொது நலனை முறையாக நிலைநாட்டலாம் என்று குற்ற வழக்குத் தொடுநர் திருப்தியடையலாம்.

4.9 குற்ற வழக்குத் தொடுநர்கள், பொது நலன் குறித்துத் தீர்மானிக்கும்போது, குற்ற வழக்கீட்டுக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் உள்ள பொருத்தமான பொது நலக் காரணிகளை இனம் கண்டு தீர்மானம் எடுக்கும் பொருட்டுக் கீழ்க்கண்ட பந்திகள் 4.12 a) முதல் g) வரை கொண்டுள்ள கேள்விகள் ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்யவேண்டும். இக்காரணிகள், டிபிபி வழங்கும் சம்பந்தப்பட்ட வழிகாட்டுதல்கள் அல்லது கொள்கை அறிக்கையில் இருக்கக்கூடிய பொதுநலக் காரணிகளுடன் சேர்த்து, பொது நலன் பற்றிய மொத்த மதிப்பீட்டைச் செய்ய குற்ற வழக்குத் தொடுநர்களுக்கு உதவக்கூடியவையாகும்.

4.10 பந்திகள் 4.12 a) முதல் g) வரை கொண்டுள்ள கேள்வி ஒவ்வொன்றுக்கும் கீழே ஒரு விளக்கக் குறிப்பு தரப்பட்டுள்ளது. இது குற்ற வழக்குத் தொடுநர்கள், கேள்வி ஒவ்வொன்றையும் ஆராய்ந்து, அது பொது நலன் சார்ந்த காரணிகளைக் குற்ற வழக்கீட்டுக்கு சாதகமாக இனம் காணுகிறதா அல்லது பாதகமாக இனம் காணுகிறதா எனபது குறித்துத் தீர்மானிக்க வழிகாட்டுகிறது. இனம் காணப்படும் கேள்விகள் முழுமையானவை அல்ல. அத்துடன் கேள்விகள் எல்லாம் ஒவ்வொரு வழக்குக்கும் பொருந்துபவை அல்ல.

4.11 தனியொரு பொது நலன் சார்ந்த காரணியொன்றே, எதிராகச் செல்லும் பல காரணிகளை விஞ்சக்கூடும். ஒரு குறிப்பிட்ட வழக்கில், குற்ற வழக்கீட்டுக்குப் பாதகமான பொது நலன் சார்ந்த காரணிகள் இருக்கலாம். இருப்பினும் குற்ற வழக்கீட்டைத் தொடர்ந்து நடத்தி, அக்காரணிகளை நீதிமன்றத்தின் பரிசீலனைக்குத், தீர்ப்பு வழங்கப்பட்டதன்மேல் சமர்ப்பிக்கலாமா என்று குற்ற வழக்குத் தொடுநர்கள் ஆராயவேண்டும்.

4.12 குற்ற வழக்குத் தொடுநர்கள் கீழ்க்கண்ட கேள்விகள் ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்யவேண்டும்:

*a) புரியப்பட்ட குற்றச் செயல் எவ்வளவுக்குப் பாரதூரமானது?*

குற்றச்செயல் எவ்வளவு அதிகம் பாரதூரமானதாக இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாக குற்ற வழக்கீடு தேவையானதாகக் காணப்படும்.

புரியப்பட்ட குற்றச் செயலின் பாரதூர மட்டத்தைத் தீர்மானிக்கும்போது, குற்ற வழக்குத் தொடுநர்கள் பரிசீலனைக்கான காரணிகளில், சந்தேக நபரின் குற்றமுறு தன்மை (culpability) மற்றும் பலியாளுக்கு ஏற்பட்ட தீங்கு ஆகிய காரணிகளையும், b) மற்றும் c) இல் உள்ள கேள்விகளைத் தம்மிடமே கேட்பதன் மூலம் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

*b) சந்தேக நபரது குற்றமுறு தன்மையின் மட்டம் என்ன?*

சந்தேக நபரது குற்றமுறு தன்மையின் மட்டம் எவ்வளவு கூடுதலாக இருக்கிறதோ, அவ்வளவு கூடுதலாக குற்ற வழக்கீடு சாத்தியமானதாகக் காணப்படும்.

குற்றமுறு தன்மை, குற்றம் புரிவதில் சந்தேக நபர் கொண்ட ஈடுபாட்டின் மட்டம் எவ்வளவு தூரம் குற்றச் செயல் முன்திட்டமிடப்பட்டது அத்துடன் /அல்லது திட்டமிடப்பட்டது அவர் முன்னர் குற்றவியல் தீர்ப்புக்கு ஆளானவரா அல்லது/அத்துடன் நீதி மன்றத்துக்கு வெளியே தீர்வுக்கு ஆளானவரா அத்துடன் பிணையில் இருந்தபோது அல்லது நீதிமன்ற உத்தரவு ஒன்றில் இருந்தபோது குற்றம் புரிந்தவரா குற்றச் செயல் தொடர்ந்ததா, மீளப் புரியப்பட்டதா அல்லது அதிகரித்ததா, அல்லது இனிமேல் குற்றம் புரியும்

சாத்தியம் உண்டா மற்றும் சந்தேக நபரின் வயது அல்லது மூப்பு (18 வயதுக்குட்பட்ட சந்தேக நபர்கள் பற்றி அறிந்துகொள்ளப் பந்தி d) யைப் பார்க்க) என்பனவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் சாத்தியம்.

குற்ற வழக்குத் தொடுநர்கள், குற்றமுறு தன்மையை ஆராயும்போது, சந்தேக நபர் காத்திரமான உடல் அல்லது உள நோய்க்கு ஆளாகி இருக்கிறாரா, அல்லது குற்றச் செயல் புரியப்பட்ட சமயம் அவ்வாறு இருந்தாரா என்பது பற்றியும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில், இதன் அர்த்தம் சில சூழ்நிலைகளில், குற்ற வழக்கீடு தேவைப்படாது போகலாம் என்பதாகும். இருப்பினும், குற்றச் செயல் எவ்வளவு தூரம் பாரதூரமானதாக இருந்தது, அது மீளப் புரியப்படும் சாத்தியம் உண்டா, பொது மக்களையும், இத்தகைய ஆட்களுக்கு பராமரிப்பு வழங்குபவர்களையும் பாதுகாக்க வேண்டிய தேவை உண்டா என்பனவற்றை வழக்குத் தொடுநர்கள் கருத்தில் கொள்வது அவசியம்.

*c) பலியாளினதும் அவருக்கு விளைவிக்கப்பட்ட தீங்கினதும் சூழ்நிலை என்ன?*

பலியாளின் சூழ்நிலை மிகவும் தொடர்புடையதாகும். பலியாளின் வடுப்படும் தன்மை எவ்வளவு கூடுதலாக உள்ளதோ அவ்வளவுக்கு கூடுதலாகக் குற்ற வழக்கீட்டின் தேவை சாத்தியமானதாகக் காணப்படும். சந்தேக நபருக்கும் பலியாளுக்குமிடையில் நம்பிக்கை அல்லது அதிகார உறவுமுறை இருக்குமிடத்தும் இது பொருந்தும்.

பொது மக்கள் சேவையில் ஈடுபட்டிருந்த சமயம் பலியாள் மீது குற்றச் செயல் புரியப்பட்டிருப்பின், அவ்விடயத்திலும் குற்ற வழக்கீட்டின் தேவை சாத்தியமானதாகக் காணப்படும்.

குற்றச் செயல் பலியாளின் இன அல்லது தேசிய வம்சாவழி, பாலினம் வலதுக் குறைவு, வயது, சமயம் அல்லது நம்பிக்கை, பாலியல் சார்பு அல்லது பாலின அடையாளம் என்பனவற்றுக்கு எதிரான பாகுபாட்டால் தூண்டப்பட்டு குற்றச் செயல் புரியப்பட்டதா அல்லது பலியாளின் அக்குணாதிசயங்களில் ஏதேனும் காரணமாக சந்தேக நபர் தனது பகையுணர்வை வெளிப்படுத்தினாரா என்பது குறித்து குற்ற வழக்குத் தொடுநர்கள் கவனம் செலுத்தவேணடும். இவ்வாறான தூண்டுதல்சக்தி அல்லது பகையுணர்வு இருப்பின் அதன் அர்த்தம் குற்ற வழக்கீடு தேவை என்பதே கூடுதல் சாத்தியமாக அமையும்.

பொது நலன் கருதி குற்ற வழக்கீடு செய்யப்படவேண்டுமா என்று தீர்மானிப்பதில், குற்ற வழக்குத் தொடுநர்கள், குற்றச் செயலின் தாக்கம் குறித்துப் பலியாள் வெளிப்படுத்தும் கருத்துக்களைக் கவனத்தில்

கொள்ளவேண்டும். பொருத்தமானபோது, வழக்குகளில் பலியாளின் குடும்பத்தினரது கருத்துக்களும் அடங்கலாம்.

குற்ற வழக்குத் தொடுநர்கள், என்றும் குற்றச் செயலின் பாரதூரத் தன்மையைக் கருத்தில் கொண்டு, குற்ற வழக்கீடு ஒன்று பலியாளின் உடல் அல்லது உள நலத்துக்குப் பாதகமான விளைவை ஏற்படுத்தும் சாத்தியம் உண்டா என்று ஆராயவேண்டும். குற்ற வழக்கீடு பலியாளின் சுகநலத்துக்குப் பாதகம் விளைவிக்கும் சாத்தியம் உண்டு என்பதற்கு சான்று இருப்பின், பலியாளின் கருத்துக்களையும் கருத்தில் கொண்டால், குற்ற வழக்கீடு தொடரப்படும் சாத்தியம் குறையக்கூடும்.

இருப்பினும், சிபிஎஸ் சேவை, பலியாட்களுக்காகவோ அவர்களது குடும்பத்தினருக்காகவோ, சொலிசிட்டர்கள் தங்கள் கட்சிக்காரர்களுக்காகச் செயற்படுவதுபோலச் செயற்படுவதில்லை. குற்ற வழக்குத் தொடுநர்களின் பார்வை முழுப்பொது நலனையும் கருத்தில் கொண்ட பார்வையாக அமையவேண்டும்.

*d) சந்தேக நபர் குற்றச் செயலின்போது 18 வயதுக்கு உட்பட்டவராக இருந்தாரா?*

குற்றவியல் நீதி முறைமை, குழந்தைகளையும் இளையோர்களையும் வயது வந்தவர்களை விட வேறு விதமாக நடத்துகிறது. சந்தேக நபர் குழந்தையாக அல்லது 18 வயதுக்குட்பட்ட இளையவராக இருப்பின், அவரது வயதுக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் தரப்படவேண்டும். குழந்தையின் அல்லது இளையவரின் உயர் நலன்களும் ஆக்கநலனும் கருத்தில் கொள்ளப்படவேண்டும். அத்துடன் குற்றச் செயலின் பாரதூரத்தன்மையின் அளவுக்கு ஏற்புடையாகாத வகையில் குற்ற வழக்கீடு அவரது எதிர்கால வாய்ப்பு நலன்களுக்கு பாதகமான தாக்கத்தை விளைவிக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்று ஆராயப்படவேண்டும். குற்ற வழக்குத் தொடுநர்கள், குழந்தைகளையும் இளையோர்களையும் குற்றத்திலிருந்து தடுக்கும் இளையோர் நீதி முறைமையின் பிரதான இலக்கைக் கவனத்தில் எடுக்கவேண்டும். குற்ற வழக்குத் தொடுநர்கள், ஐக்கிய நாடுகளின் 1989ம் ஆண்டின் குழந்தையின் உரிமைகள் உடன்படிக்கை விதிக்கும் கடப்பாடுகளையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

சந்தேக நபர் எவ்வளவுக்கு வயது குறைந்தவராக இருக்கிறாரோ, அவ்வளவுக்கு குற்ற வழக்கீட்டுத் தேவையின் சாத்தியம் குறைவாக இருக்கும்.

இருப்பினும், சந்தேக நபர் 18 வயதுக்கு உட்பட்டவராக இருந்தபோதிலும் குற்ற வழக்கீடு ஒன்று பொது நலனுக்கு உகந்தது என எடுத்துக்காட்டும் சூழ்நிலைகள் ஏற்படலாம். புரியப்பட்ட குற்றச் செயல் பாரதூரமிக்கது, சந்தேக நபரின் கடந்தகாலப் பதிவுகளின்படி குற்ற வழக்கீட்டுக்குப் பொருத்தமான மாற்று வழிகள் இல்லை அல்லது குற்ற ஒப்புதல் இல்லாத நிலையில் நீதிமன்றத்துக்கு வெளியே பெற்றுக்கொள்ளக்கூடிய குற்ற நடத்தையை நிவர்த்திக்கும் வழிகள் இல்லை என்பன இச்சூழ்நிலைகளில் அடங்கும்.

*e) சமூகத்தில் ஏற்படும் தாக்கம் என்ன?*

குற்றச் செயல் சமூகத்தில் எவ்வளவு கூடுதலாகத் தாக்கத்தை ஏற்படுத்துகிறதோ அவ்வளவு கூடுதலாக குற்ற வழக்கீடு சாத்தியமாகலாம். இக்கேள்வியை ஆராயும்போது, குற்ற வழக்குத் தொடுநர்கள், சமூகம் என்பது அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பதம் என்பதையும் ஓரிடத்தைச் சேர்ந்த ஒரு சமூகத்தை மட்டும் அது குறிக்கவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும்.

*f) அளவொத்த பதிலுத்தாரமாக குற்ற வழக்கீடு அமைகின்றதா?*

குற்ற வழக்கீடு, அதனைத் தொடருவதால் ஏற்படக்கூடிய விளைவின் அளவுக்கு ஒத்ததாக உள்ளதா என்றும் குற்ற வழக்குத் தொடுநர்கள் ஆராயவேண்டும். அவ்வாறு ஆராயும்போது பரிசீலனையில் உள்ள வழக்குக்குத் தொடர்புடையவையாகக் கீழ்க்கண்டவை அமையலாம்:

- சிபிஎஸ் சேவைக்கும், பரந்த குற்றவியல் நீதி முறைமைக்கும் ஏற்படும் செலவு – விசேடமாகக், கிடைக்கக்கூடிய தெண்டத் தொகையுடன் ஒப்பிடும்போது மிதமிஞ்சியதாகக் கருதப்படக்கூடிய செலவு. (இக்காரணியின் அடிப்படையை மட்டும் கருத்தில் கொண்டு குற்ற வழக்குத் தொடுநர்கள் பொது நலனைத் தீர்மானித்தலாகாது). பந்திகள் 4.12 a) முதல் g) வரை உள்ள ஏனைய கேள்விகளை ஆராயும்போது இனம் காணப்பட்ட பொது நலன் சார்ந்த காரணிகளையும் கவனத்தில் கொள்வது அவசியம். இருப்பினும் பொது நலன் குறித்த ஒரு மொத்தமாக மதிப்பீட்டைச் செய்யும்போது செலவு ஒரு தொடர்புடைய காரணியாகக் காணப்படுகிறது.

- வலுவான வழக்கு முகாமைத்துவத்தின் விதிமுறைகளுக்கு இணங்க வழக்குகள் தொடுக்கப்பட்டு நடத்தப்படக்கூடியவையாக இருத்தல் வேண்டும். உதாரணமாக, பல சந்தேக நபர்களைக் கொண்டதான ஒரு வழக்கில், மிதமிஞ்சி நீண்டதும் சிக்கலானதுமான செயற்பாடுகளைத் தவிர்க்கும்

*g) தகவல் மூலங்களுக்குப் பாதுகாப்புத் தேவையா?*

பொது நல விலக்களிப்பு அற்ற வழக்குகளில் குற்ற வழக்கீடு தொடரப்படும்போது, தகவல் மூலங்களுக்கு, சர்வதேச உறவுகளுக்கு, அல்லது தேசிய பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கக்கூடியதான விபரங்களைப் பகிரங்கமாக வெளியிட நேரிடலாம். அவ்வாறானபோது வெகு அவதானமாக நடந்துகொள்ளவேண்டும். இத்தகைய வழக்குகள் தொடர்ச்சியாக மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவது அவசியம்.

## நுழைவாயில் சோதனை

5.1 சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டாலொழிய அவர் காவலிலிருந்து விடுதலை செய்யப்படவேண்டும் எனும் சூழ்நிலையில், அவர் பற்றிய சாட்சியங்கள் முற்றாகப் பெற்றுக்கொள்ளப்படாது இருக்கும் போது அவரைப் பிணையில் விடுவிப்பதில் உள்ள ஆபத்தைக் கருத்தில் கொண்டு மாத்திரம் நுழைவாயில் சோதனை மேற்கொள்ளப்படலாம்.

**எப்போது நுழைவாயில் சோதனை மேற்கொள்ளப்படலாம்?**

5.2 கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்று குற்ற வழக்குத் தொடுநர்கள் தீர்மானிக்கவேண்டும்:

a) முழுச் சட்டத் தொகுப்புச் சோதனையின் சாட்சியக் கட்டத்தை செயற்படுத்துவதற்கு ஏதுவாகப் போதிய சாட்சியங்கள் தற்போது இல்லை, அத்துடன்
b) நியாயமான ஒரு கால எல்லைக்குள் மேலும் சாட்சியங்கள் கிடைக்கும் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன, அத்துடன்
c) வழக்குச் சூழ்நிலைகளின் காத்திரமான நிலை, உடனடியாகக் குற்றச்சாட்டு சுமத்தும் தீர்மானம் எடுப்பதை நியாயப்படுத்துவதாக உள்ளது, அத்துடன்
d) 1976 பிணைச் சட்டத்துக்கு அமைய, பிணையை எதிர்ப்பதற்கு தொடர்ச்சியான போதிய காரணங்கள் உள்ளன என்பதுடன், வழக்கின் அனைத்துச் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டால், அவ்வாறு செய்வதே சரியாகும்.

5.3 மேற்கூறப்பட்ட நிபந்தனைகளில் ஏதும் ஒன்றேனும் நிறைவேறாதபோது நுழைவாயில் சோதனையை மேற்கொள்ள இயலாது. அத்துடன் சந்தேக நபர் மீது குற்றச்சாட்டு சுமத்த இயலாது. காவலுக்குப் பொறுப்பான அலுவலர், அந்நபரைத் தொடர்ந்து காவலில் வைத்திருப்பதா அல்லது பிணையில், நிபந்தனைகளுடனோ இல்லாமலோ, விடுவிப்பதா என்று தீர்மானிப்பார்.

5.4 நுழைவாயில் சோதனையின் சாட்சியப் பரிசீலனைக்கென இரண்டு பகுதிகள் உள்ளன.

**நுழைவாயில் சோதனையின் முதல் பகுதி – நியாயமான அளவு சந்தேகம் உண்டா?**

5.5 குற்றம் சாட்டப்படப்போகும் ஆள் குற்றச் செயலைப் புரிந்துள்ளார் என்பதற்குக் குறைந்தது நியாயமான அளவு சந்தேகம் உண்டு என்பது குறித்து குற்ற வழக்குத் தொடுநர்கள் திருப்திப்படவேண்டும்.

5.6 இதனைத் தீர்மானிப்பதில் அதுவரை கிடைத்துள்ள சாட்சியங்களை குற்ற வழக்குத் தொடுநர்கள் ஆராயவேண்டும். அவை சாட்சிகளின் வாக்குமூலங்களாக, பொருட்களாக அல்லது வேறு தகவல்களாக அமையலாம். இருப்பினும் குற்ற வழக்குத் தொடுநர் அவை பற்றிக் கீழ்க்கண்டவாறு திருப்தி அடையவேண்டும்:

a) அவை தொடர்புடையவையாக இருத்தல், அத்துடன்
b) அவை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான எற்புடைய வடிவத்தில் இருத்தல், அத்துடன்
c) அவை வழக்கில் பயன்படுத்தப்படும்.

5.7 குற்ற வழக்குத் தொடுநருக்கு இவ்விடயத்தில் திருப்தி ஏற்படின், அவர் நுழைவாயில் சோதனையின் இரண்டாவது பகுதியை ஆராய்வார்.

**நுழைவாயில் சோதனையின் இரண்டாவது பகுதி – குற்றத் தீர்ப்புக்குரிய கைகூடக்கூடிய வாய்ப்பை வழங்கும் வகையில் மேலும் சாட்சியங்களைத் திரட்ட இயலுமா?**

5.8 தொடரும் புலன்விசாரணைகள் மூலம் ஒரு நியாயமான கால எல்லைக்குள் மேலும் சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ள இயலும் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன என்று குற்ற வழக்குத் தொடுநர்கள் திருப்தியுறவேண்டும். அதனால் ஒருங்கு சேர்க்கப்படும் சாட்சியங்கள் முழுச் சட்டத் தொகுப்புச் சோதனையின்படி குற்றத் தீர்ப்புக் கைகூடக்கூடிய வாய்ப்பு ஒன்றினை ஏற்படுத்த வல்லவையாக அமையும் என்றும் அவர்கள் திருப்தியுறவேண்டும்.

5.9 கிடைக்கப்பெறும் மேலதிக சாட்சியங்கள் இனங்காணக்கூடியவையாக இருத்தல் வேண்டும், வெறும் ஊகங்களாக மட்டும் இருத்தலாகாது.

5.10 இத்தீர்மானத்தை மேற்கொள்வதில், குற்ற வழக்குத் தொடுநர்கள் கீழ்க்கண்டவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும்:

a) கிடைக்கக்கூடிய மேலதிக சாட்சியங்களின் தன்மை, பரப்பளவு, மற்றும் ஏற்புடைமை. அத்துடன் அவற்றால் வழக்கில் ஏற்படக்கூடிய தாக்கம்

b) சாட்சியங்கள் அனைத்தாலும் ஆதாரப்படுத்தப்படக்கூடிய குற்றச்சாட்டுக்கள்

c) சாட்சியங்கள் ஏற்கனவே கிடைக்காது போனமைக்கான காரணங்கள்

d) மேலதிக சாட்சியங்களைப் பெறுவதற்குத் தேவைப்பட்ட காலம் மற்றும் சூழ்நிலை முழுவதையும் கருத்தில் கொண்டு நோக்கும்போது, அதன் விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய காலதாமதம் நியாயமானதா என்பது.

5.11 நுழைவாயில் சோதனையின் இரு பகுதிகளும் நிறைவேற்றப்பட்டிருப்பின், குற்ற வழக்குத் தொடுநர்கள், முழுச் சட்டத் தொகுப்புச் சோதனையின் பொது நலன் சார்ந்த கட்டத்தை, அப்போதுள்ள தகவல்களின் அடிப்படையில் பிரயோகித்தல் வேண்டும்.

**நுழைவாயில் சோதனையை மீளாய்வு செய்தல்**

5.12 நுழைவாயில் சோதனையின் கீழ் குற்றம் சாட்டும் தீர்மானம் மீளாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருத்தல் வேண்டும். குற்றச்சாட்டு தொடர்ந்து பொருந்துவதாக இருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் பிணையைத் தொடர்ந்து எதிர்த்தலை நியாயப்படுத்தும் வகையிலும் சாட்சியங்கள் ஒழுங்காக மதிப்பாய்வு செய்யப்படவேண்டும். முழுச் சட்டத் தொகுப்புச் சோதனையை மேற்கொள்ள நியாயமான அளவுக்கு இயலுமாக இருக்கும்போது அது மேற்கொள்ளப்படவேண்டும். எவ்வாறாயினும், அது காவலில் வைத்திருக்கும் கால எல்லை முடிவதற்குமுன் மேற்கொள்ளப்படவேண்டும்.

## குற்றச்சாட்டுக்களைத் தெரிவு செய்தல்

6.1 குற்ற வழக்குத் தொடுநர்கள் கீழ்க்கண்டவாறான குற்றச்சாட்டுக்களைத் தெரிவு செய்யவேண்டும்:

a) அவை குற்றச் செயலின் பாரதூரத் தன்மையையும் பரப்பளவையும் பிரதிபலிப்பதுடன், அவை சாட்சியத்தால் ஆதாரப்படுத்தப்படக்கூடியவையாக இருத்தல் வேண்டும்

b) அவை தண்டனை வழங்கவும், பொருத்தமான தீர்ப்பை அடுத்த உத்தரவுகளை வழங்கவும் நீதிமன்றத்துக்குப் போதிய அதிகாரங்களை வழங்குவனவாக இருத்தல் வேண்டும். அத்துடன்,

c) அவை வழக்கைத் தெளிவாகவும், எளிமையாகவும் முன்வைக்க உதவுவதாக இருத்தல் வேண்டும்.

6.2 இதன் அர்த்தம், குற்ற வழக்குத் தொடுநர்கள், அவர்களுக்குத் தெரிவு ஏதும் இருப்பின், எப்போதும் அதிபாரதூரமான குற்றச்சாட்டைத் தெரிவு செய்யவோ, அதனைத் தொடரவோ மாட்டார்கள் என்பதாகும்.

6.3 குற்ற வழக்குத் தொடுநர்கள், பிரதிவாதியை ஒருசில குற்றச்சாட்டுக்களை மட்டும் குற்றவாளியென ஏற்றுக்கொள்ளத் தூண்டுமுகமாகத், தேவைக்கு மேற்பட்ட குற்றங்களைச்சாட்டி ஒருபோதும் வழக்கு நடத்தலாகாது. இதே விதமாக, அவர்கள் பிரதிவாதி ஒருவரை, அவர் பாரதூரமற்ற ஒரு குற்றச்சாட்டை குற்றவாளி என்று ஒப்புக்கொள்ள வைப்பதற்காக, பாரதூரமிக்க குற்றம் ஒன்றைச் சாட்டி அவர்மீது வழக்கு நடத்தலாகாது.

6.4 வழக்கு எங்கே விசாரிக்கப்படவேண்டும் என்பது பற்றி நீதிமன்றமோ பிரதிவாதியோ தீர்மானம் மேற்கொண்டதைக் காரணமாகக் கொண்டு குற்ற வழக்குத் தொடுநர்கள் குற்றச்சாட்டை மாற்றலாகாது.

6.5 குற்றம் சாட்டப்பட்டதன்மேல் வழக்கு தொடர்ந்து நடைபெறும்போது, சூழ்நிலையில் தொடர்புடைய மாற்றம் ஏதும் ஏற்படின், அதனைக் குற்ற வழக்குத் தொடுநர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

## நீதிமன்ற விசாரணைக்கு வெளியே ஏற்படும் தீர்வுகள்

7.1 நீதிமன்றத்தில் நடைபெறும் குற்ற வழக்கீட்டுக்கு மாற்றாக நீதிமன்ற விசாரணைக்கு வெளியே வழக்குத் தீர்வு ஒன்று, குற்றம் புரிந்தவருக்கும் அத்துடன் / அல்லது குற்றச்செயலின் பாரதூரத்தன்மைக்கும் விளைவுகளுக்கும் பொருத்தமான பதிலீடாகக் கருதப்படின், காணப்படலாம்.

7.2 குற்ற வழக்குத் தொடுநர்களிடம், ஒரு சாதாரண எச்சரிக்கை விடுப்பது, நிபந்தனையுடன் கூடிய எச்சரிக்கை விடுப்பது, பொருத்தமான விதிமுறை நடவடிக்கைகளை மேற்கொள்வது, தண்டனை அல்லது சிவில் தெண்டம் விதிப்பது, அல்லது வேறு ஏதும் தீர்வு காண்பது என்பன பற்றி ஆலோசனை அல்லது அனுமதி கோரப்படும்போது அவர்கள் இவற்றுடன் தொடர்புடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றவேண்டும். நீதிமன்ற விசாரணைக்கு வெளியே தீர்வு தேடப்படும் குறிப்பிட்ட அந்த வழக்குக்கான நியம சாட்சியம் நிறைவேற்றப்படுவதை அவர்கள் உறுதிப்படுத்தவேண்டும். தேவையானவிடத்து, குற்றத்தை தெளிவாக ஒப்புதல், இத்தகைய தீர்வினால் பொது நலன் முறையாகப் பேணப்படுதல் என்பனவற்றையும் அவர்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

## விசாரணை முறை

8.1 குற்ற வழக்குத் தொடுநர்கள், நீதவான் நீதிமன்றத்தில் பிரதிவாதியின் விசாரணை எங்கே நடத்தப்படவேண்டும் என்பது பற்றி பணிந்துரைத்தல் செய்யும்போது, தண்டனைத் தீர்ப்பு வழங்குதல் மற்றும் ஒதுக்கீடு செயதல் (allocation) என்பன பற்றிய நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றவேண்டும்.

8.2 வழக்கு ஒன்றை நீதவான் நீதிமன்றத்திலேயே தொடர்ந்திருக்கக் கோருவதற்கு விரைந்த தீர்வு மட்டும் ஓரே காரணமாக இருத்தலாகாது. ஆயினும், வழக்கு ஒன்று முடிக்குரிய நீதிமன்றத்துக்கு (Crown Court) அனுப்பப்படுவதால் ஏற்படக்கூடிய தாமதத்தின் விளைவையும், அதனால் பலியாள் அல்லது சாட்சி எவரேனும் மீது ஏற்படக்கூடிய தாக்கத்தையும் குற்ற வழக்குத் தொடுநர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**இளையோர் சம்பந்தப்பட்ட வழக்குகளின் விசாரணைக்கான இடம்**

8.3 இளையோர், இயலுமானவிடத்து, இளையோர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவேண்டும் என்பதை குற்ற வழக்குத் தொடுநர்கள் மனதில் கொள்ளவேண்டும். அவர்களது குறிப்பான தேவைகளை நிறைவேற்றுவதற்குச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டது இந்நீதிமன்றமே. மிகப் பாரதூரமான வழக்கானால் மட்டும் இளையவர் ஒருவர் முடிக்குரிய நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவேண்டும். அல்லது நீதியின் நலன் கருதி இளையவர் ஒருவர் வயது வந்தவர் ஒருவருடன் கூட்டாக விசாரிக்கப்படவேண்டுமாயின் அவ்வாறு முடிக்குரிய நீதிமன்றத்தில் அவர் விசாரிக்கப்படலாம்.

## குற்ற ஏற்புரையை ஏற்றுக்கொள்ளல்

9.1 பிரதிவாதிகள் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளாது, அவற்றில் சிலவற்றை மட்டும் பொறுத்தவரை, தாம் குற்றவாளி என்று ஏற்றுக்கொள்ள விரும்பலாம். மாற்றாக, குற்றச் செயலின் ஒரு பகுதியை மட்டும் அவர்கள் ஏற்றுக் கொள்வதன் காரணமாக, வேறு ஒரு, பாரதூரம் குறைந்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள அவர்கள் விரும்பலாம்.

9.2 குற்ற வழக்குத் தொடுநர்கள், பிரதிவாதியின் குற்ற ஏற்புரையை, நீதிமன்றம் குற்றச் செயலின் பாரதூரத்தன்மைக்கு நிகரான தீர்ப்பு ஒன்றை வழங்க முடியுமானால் மட்டுமே, குறிப்பாகக் கேடான அம்சங்கள் காணப்படும் இடத்து, ஏற்றுக்கொள்ளவேண்டும். குற்ற வழக்குத் தொடுநர்கள், குற்ற ஏற்புரை ஒன்றை, அது வெறுமனே சௌகர்யமான ஒன்றாகக் காணப்படுகிறது என்ற காரணத்துக்காக, ஒருபோதும் ஏற்றுக்கொள்ளலாகாது.

9.3 குற்ற ஏற்புரை ஏற்றுக்கொள்ளக்கூடியதா என்பதைத் தீர்மானிப்பதில், குற்ற வழக்குத் தொடுநர்கள் பலியாளின் நலன்கன், இயலுமானவிடத்து, அவரின் கருத்துக்கள் ஆகியவற்றையும், அல்லது பொருத்தமானவிடத்து, அவரது குடும்பத்தினரின் கருத்துக்களையும் கவனத்தில் கொள்வதையும் ஏற்புரையை ஏற்றுக்கொள்வது பொது நலனுக்கு உகந்ததா என்பதையும் உறுதிப்படுத்தவேண்டும். ஆயினும் தீர்மானம் எடுப்பது குற்ற வழக்குத் தொடுநரைச் சார்ந்தது.

9.4 எந்த அடிப்படையில் குற்ற ஏற்புரை ஏதேனும் முன்வைக்கப்படுகிறது அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகிறது என நீதிமன்றத்துக்குத் தெளிவுபடுத்தப்படவேண்டும். பிரதிவாதி ஒருவர் குற்றச்சாட்டுக்களை, குற்ற வழக்கீட்டு வாதத்தின்படி அல்லாது வேறு பொருண்மைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளும் வழக்குகளைப் பொறுத்தவரை, இவ்வடிப்படையில் வழங்கப்படும் தீர்ப்பில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படலாம் என்று கருதப்படுமிடத்து, என்ன நடந்தது என்று தீர்மானிக்குமுகமாக, சாட்சிகளை விசாரிக்க நீதிமன்றம் அழைக்கப்படவேண்டும். அதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்க அது கோரப்படவேண்டும்.

9.5 பிரதிவாதி ஒருவர், நீதிமன்றத்திடம் அது தீர்ப்பு வழங்கும் வேளையில் குற்றச் செயல் ஒன்றை கருத்தில் கொள்ளுமாறு கோரப்போவதாக முதலில் உணர்த்திவிட்டு, பின்னர் நீதிமன்றத்தில் அக்குற்றச் செயலை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்ட நிலையில் குற்ற வழக்குத் தொடுநர்கள், அந்தக் குற்றச்செயல்

9.6 குறைந்த பட்சச் செயலுறுத்துத் தண்டனை விதிப்பைப் பிரதிவாதி தவிர்க்கக்கூடியதான குற்ற ஏற்புரைகளைப் பரிசீலிக்கும்போது விசேட கவனம் செலுத்தப்படவேண்டும். குற்ற ஏற்புரைகள் முன்வைக்கப்படும்போது, குற்ற வழக்குத் தொடுநர்கள், சில குற்றச்செயல்கள் விடயத்தில் துணை உத்தரவுகள் பிறப்பிக்கப்படலாமாயினும் ஏனைய குற்றச்செயல்கள் விடயத்தில் இயலாது என்பதையும் மனதில் கொள்ளவேண்டும்.

## குற்ற வழக்கீட்டுத் தீர்மானம் ஒன்றை மீள் பரிசீலனை செய்தல்

10.1 சிபிஎஸ் சேவை மேற்கொள்ளும் தீர்மானங்களில் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடியதாக இருக்கவேண்டும். வழமையாக, சந்தேக நபர் அல்லது பிரதிவாதி ஒருவரிடம் சிபிஎஸ் சேவை, குற்ற வழக்கீடு தாக்கலாகாதென்று அல்லது குற்ற வழக்கீடு நிறுத்தப்பட்டுவிட்டது கூறினால், வழக்கு மீள ஆரம்பிக்கப்படமாட்டாது. ஆயினும், இடையிடையே சிபிஎஸ் சேவை குற்ற வழக்கீட்டைத் தொடருவதில்லை அல்லது நீதிமன்ற விசாரணைக்கு வெளியே தீர்வை நாடுவது என்ற தீர்மானத்தை ஏன் மாற்றுகிறது, அல்லது அது குற்றவழக்கீட்டை, குறிப்பாக வழக்கு பாரதூரமானதாக இருப்பின், எப்போது மீள ஆரம்பிக்கப் போகிறது என்பதற்குக் காரணங்கள் உள்ளன.

10.2 காரணங்களில் கீழ்க்கண்டவை அடங்கும்:

a) முந்திய தீர்மானத்தை மீள நோக்கும்போது அத்தீர்மானம் தவறு என்று காணப்படும் வழக்குகள் விடயத்தில், குற்றவியல் நீதி முறைமையில் நம்பிக்கையை நிலைநாட்டுமுகமாக, குற்றவழக்கீடு, பழைய தீர்மானம் அவ்வாறிருந்தபோதிலும், கொண்டுவரப்படவேண்டும்.

b) மேலும் சாட்சியங்களைச் சேகரித்து ஆயத்தப்படுத்துமுகமாக . [சாட்சியங்கள் கிட்டிய எதிர்காலத்தில் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில்] நிறுத்தி வைக்கப்பட்ட வழக்குகள். இவ்வழக்குகள் விடயத்தில், குற்ற வழக்குத் தொடுநர் பிரதிவாதியிடம் குற்ற வழக்கீடு மீண்டும் ஆரம்பமாகும் என்று தெரிவிப்பார்.

c) போதிய சாட்சியமின்மையால் நிறுத்திவைக்கப்பட்டு, முக்கியமான சாட்சியங்கள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதான வழக்குகள்.

d) இறப்பு சம்பந்தப்பட்ட வழக்குகள். மரண விசாரணையில் வெளிவந்தவை பற்றிய மீளாய்வு ஒன்று குற்ற வழக்கீடு கொண்டுவரப்படவேண்டுமென்ற தீர்மானத்துக்கு - வழக்குத் தொடருவதில்லை என முந்திய தீர்மானம் இருந்தபோதிலும், வழிகோலுகிறது.

இவ்வாவணத்தை மின்னியக்கமுறையில் கீழ்க்கண்ட இணைய தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்: www.cps.gov.uk

அரச குற்ற வழக்குத் தொடுநர்களுக்கான சட்டத் தொகுப்பின் மேலதிக பிரதிகளும் அதன் மாற்றுமொழிப் பதிப்புக்கள் மற்றும் வடிவங்கள் பற்றிய தகவல்களும் சிபிஎஸ் சேவையிடம் கிடைக்கும்.

தயவு செய்து publicity.branch@cps.gsi.gov.uk எனும் இணைய முகவரியுடன் அல்லது, அஞ்சல் மூலமாயின், கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

CPS Communication Division
Rose Court
2 Southwark Bridge
London, SE1 9HS

The Code for Crown Prosecutors
7th Edition, January 2013
© Crown Copyright